# ஆண்களும் பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளும்: பெண்களின் போராட்டங்களில் தோழமை

## ஆண்களின் பங்கேற்பிற்கான ஒருங்கிணைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு கருத்துத்தாள்

### 1. முகவுரை

ஆண்களின் பங்கேற்பிற்கான ஒருங்கிணைப்பு (MenEngage Alliance) என்பது, உலகின் பல நாடுகளில் செயல்பட்டு வரும் 600க்கும் அதிகமான அமைப்புகளின் ஒரு உலகளாவிய ஒருங்கிணைப்பு ஆகும். பாலின சமத்துவத்தை உருவாக்கும் பொருட்டு, ஆண்கள் மற்றும் சிறுவர்களின் பொறுப்புணர்வினையும், அதற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளையும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிவதையே தனது பொது நோக்கமாக கொண்டதுதான் இந்த ஒருங்கிணைப்பு. பாலின சமத்துவத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் பாலுறவு மற்றும் மகப்பேறு உரிமைகளை மேம்படுத்துவதற்காவும் மேற்கொள்ளப்படும் கூட்டு பிரச்சாரத்தில், ஆறு பிராந்தியங்களையும், ஏறக்குறைய 50 தேசிய அளவிலான வலைப்பின்னல்களையும், நூற்றுக்கணக்கான அமைப்புகளையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே இந்த ஒருங்கிணைப்பின் பிரதான நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல  உரிமைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்; பெண்களை இச்சேவைகள் சென்றடைய வேண்டும்; இவற்றின் மூலம் அவர்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக தேசிய மற்றும் பிராந்திய அளவிலான அமைப்புகளுடன் சேர்ந்து ஆண்களை ஒன்று திரட்டி இப்பணிகளில் ஈடுபடுத்தும் விதமாக, 2014இல் ஓர் உலகளலாவிய முயற்சியினை இந்த ஆண்களின் பங்கேற்பிற்கான ஒருங்கிணைப்பு தொடங்கவிருக்கிறது. பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல  உரிமைகளுக்கான அமைப்புகள் உட்பட, இதர பெண்ணுரிமை அமைப்புகளுடன் இணைந்து இத்திட்டமானது மேம்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கான நியாயமான காரணங்கள், நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் குறித்த பின்னணியை விளக்குவதாக இந்த கருத்துத்தாள் அமையும்.

## 2. நோக்கங்களும் நியாயமான காரணங்களும்

**பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள்: பெண்களுக்கான ஒரு தொடர் போராட்டம்** - குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஆற்றலே பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் உள்ள மிகவும் அடிப்படையான வித்தியாசமாகும். தொண்மைக்காலங்களில் பெண்களின் இந்த ஆற்றலானது மிகுந்த மரியாதைக்குரியதாக போற்றப்பட்டது. தொன்மை நாகரிங்களை சார்ந்த கலைப் பொருட்களே இதற்கு சான்று. இருப்பினும் நாகரீக வளர்ச்சி பயணத்தில், தந்தைவழிச் சமுதாய உதயத்தில், பெண்களின் பாலுணர்வு மற்றும் குழந்தைபேறு மீதான ஆதிக்கம், உலகம் முழுவதிலும் உள்ள சமூகங்களில், ஒரே மாதிரியான தன்மையைக் கொண்டதாகியது. மார்க்ரட் சேங்கர் ( Margaret Sanger) மற்றும் மாரி ஸ்தோப்ஸ் (Marie Stopes) போன்ற முன்னோடிகள் சமூகத்தின் வழிமுறைகளை எதிர்த்தும் குழந்தை பேற்றினை கட்டுப்படுத்த உதவும் கருத்தடை சாதனங்களைப் பற்றி தெரிந்துகொள்ள, பயன்படுத்த அல்லது பாலுறவு இன்பத்தை நாட பெண்களுக்கும் உரிமைகள் இருக்கு என்பதை நிலைநாட்ட சிறையிலிடப்படுவதையும் துச்சமாக மதித்து போராடியதின் விளைவாக, 20ம் நூற்றாண்டில், இனப்பெருக்க மற்றும் பாலுறவு உரிமைக்கான பெண்களின் போராட்ட வரலாற்றில், ஒரு புதிய அத்தியாயம் உருவானது. 1994 கெய்ரோவில் நடைபெற்ற மக்கள்தொகை மற்றும் வளர்ச்சி உலக மாநாடு (International Conference on Population and Development ICPD, Cairo,1994 ) மற்றும் பெய்ஜிங்கில் 1995இல் நடந்த நான்காவது உலக பெண்கள் மாநாடு (Fourth World Conference on Women, Beijjing) களின் பலனாக முதல் முறையாக பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள் குறித்த சிந்தனை, கொள்கை உருவாக்கத்தின் அகராதியில் இடம் பெற்றது. அதுவும் போராட்டமின்றி நடக்கவில்லை. 20 வருடங்கள் கடந்தும், இனப்பெருக்க மற்றும் பாலுறவு உரிமைகளுக்கான

பெண்களின் இந்த போராட்ட கதை இன்னும் முற்று பெறவில்லை. இன்றும் பல நாடுகளில், உலகின் பல சமூகங்களில் பெண்கள் கருக்கலைப்பு, கருத்தடைச் சாதனங்களுக்கான உரிமைகளுக்காக, ஏன் பாதுகாப்பான குழந்தை பிரசவித்தலுக்குக் கூட போராடும் நிலையேத் தொடர்கிறது.

பாலுறவு தொடர்புகள் மற்றும் இனப்பெருக்க குறித்த சமூக கலாச்சார விதிமுறைகள் உலகமெங்கும் மிகவும் மாறுபட்டவைகளாக இருக்கின்றன. திருமணமின்றி வாழ்வது, துறவு ஏற்பது போன்றவை சில மத அமைப்புகளில், இறைவனுடன் நெருங்கி ஐக்கியமாவதற்கு உகந்த நிலைகளாகவும், இனப்பெருக்க மற்றும் தனிநபர் பாலுறவிற்கு ஏற்ற நிலைகளாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. மாறாக, வேறு தளங்களில், பல சமூகங்களில் பலதாரமணம் அனுமதிக்கப்படுகிறது. மற்றவை, ஓரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட வாழ்க்கைத் துணையை கண்டு கொந்தளிக்கிறது. சில சமூகங்களில், ஓரே பாலினத்தை சேர்ந்தவர்கள் மத்தியில் பாலுறவு இருப்பின் அது புனிதப்படுத்தப்படுகிறது. அதே சமயம், மற்ற இடங்களில் அது குற்றச் செயலாக பார்க்கப்படுகிறது. தங்களுக்குள் திருமணத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்ட பாலுறவுகளை உயர்வாக பார்க்கும் சில சமூகங்கள், சில வருடங்களுக்கு முன்பு வரை, தங்களது அடிமைகளுக்கு அதை தடை செய்திருந்தன. பெரும்பான்மை சமூகங்களில், திருமணத்திற்கு பின் பெண்கள் தங்கள் கணவன்மார் வீடுகளுக்கு சென்று வாழ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். அதே சமயம், சில சமூகங்களில் அதற்கு மாறாக ஆண்கள் தங்கள் மனைவிமார்களின் வீடுகளுக்கு செல்ல வேண்டும். திருமணத்தைத் தொடர்ந்து குழந்தைபேறு எதிர்பார்க்கப்படுகிறது. குழந்தை பெறாத பெண்கள் பல சமூகங்களில் இழிவு படுத்தப்படுகிறார்கள். பெண்கள் குழந்தைகளை பெற்றெடுத்தாலும், தந்தைவழி சமுதாயத்தின் நியதிப்படி, குழந்தைகள் மீதான உரிமை தந்தையையே சாரும். பல நேரங்களில், ஒரு பெண் எத்தனை குழந்தைகளை பெற வேண்டும் என்பது அக்குடும்பத்தினர் ஏற்படுத்தும் நிர்பந்தத்தை மட்டும் பொருத்தது அல்ல. அவள் சார்ந்த மதம் மற்றும் தேசத்தின் விருப்பத்தை பொருத்ததும் ஆகும். இப்படி பலதரப்பட்ட நடைமுறைகள் இருப்பினும், உலகத்தில் எந்த சமூகத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, குழந்தைபேறு, பாலுறவு

பொருத்தமட்டில் சுயமாக முடிவெடுக்கும் உரிமை பெண்களுக்கு மிகக் குறைவாகவே உள்ளது.

சமத்துவம் மற்றும் மனித உரிமைகளின் உலகளாவியத் தன்மைகளைப் பற்றிய புரிதலானது 20ஆம் நூற்றாண்டின் மிகவும் வலிமை வாய்ந்த ஒரு கருத்துருவாக்கமாகும். உரிமைகள் பற்றிய கருத்தருவாக்கமானது, தனிநபர்களும், சமூகங்களும் புதிய எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் உருவாக்கி கொள்ள அனுமதித்தது மட்டுமின்றி, சில சமூக வழிமுறைகளால் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டும், மதங்களாலும், அரசுகளாலும் அங்கீகரிக்கப்பட்டும் நடைமுறையிலுள்ள பலவகையாக பாகுபாடுகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டி, கூர்மையாக உற்று நோக்கவும் வைத்திருக்கிறது. வீதியிலிறங்கி நடத்தப்படும் போராட்டங்களும் கருத்தரங்குகளில் நடத்தப்படும் விவாதங்களும் பலதரப்பட்ட சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியிலான சீர்திருத்தங்களை கொண்டு வந்திருப்பினும், இன்னும் செயல்பட வேண்டியவை அதிகமாகவே உள்ளன. பல சமூகங்களில் பல விதிமுறைகள், முறையான சட்டசீர்திருத்தங்களையம் மீறி, நெகிழ்வுத்தன்மையற்றவையாக கடினமாகவே இருக்கின்றன. அவற்றில் அதிகமானவை பாலுணர்வு மற்றும் குழந்தைப்பேறு சம்பந்தப்பட்டவையே. இத்தகைய கட்டப்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் தான். உரிமைகள் மற்றும் சுதந்திரத்தின் எல்லையை விரிவுபடுத்தும் வகையிலான போராட்டங்களை பெண்கள் இயக்கங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. சில சமயங்களில், குழந்தைபேறுக்கான உரிமைகளுடன் பாலுறவுக்கான உரிமைகளை இணைத்துப் பார்ப்பதில்லை.

**பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளுக்கான போராட்டங்களின் வரலாறு**

20ஆம் நூற்றாண்டில் பெண்கள் உரிமைகள், பாலுறவு மற்றும் குழந்தைபேறு நலத்திற்கான உரிமைகள் குறித்த போராட்டங்களே, போராட்டங்களிலேயே மிகவும் தீவிரமானவையாக இருந்துள்ளன. 20ஆம் நூற்றாண்டின் துவக்க காலங்களில் இந்த போராட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பிறப்பைக் கட்டுப்படுத்துதல் அல்லது அவர்கள் கருத்தடை சாதனங்களை பெறுதலுக்கான போராட்டங்களாக அமைந்துள்ளன. அமெரிக்காவில், 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கருத்தடை சாதனங்களை விற்பதை, விநியோகிப்பதை தடை செய்த மற்றும் "ஆபாசம்" என்றும் கூறிய கோம்ஸ்டாக் சட்டம் (Comstock Law) என்ற ஒன்று நடைமுறையிலிருந்தது. தனது தாய் பல குழந்தைகளை ஈன்றெடுத்தினால் இறக்க நேரிட்டதை கண்டு கலங்கிய, இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ செவிலி மார்கரெட் சேங்கர் (Margaret Sanger) என்பவர், அமெரிக்காவில் பிறப்பு கட்டுப்பாட்டு மருத்துவமனை ஒன்று உருவாகக் காரணமாக இருந்தார். ஆனால் அவரது மருத்துவமனை காவல் துறையினரால் தாக்கப்பட்டது. அவரது பணி சட்டத்திற்கு புறம்பானது என அறிவிக்கப்பட்டது. மார்கரெட் சேங்கர் இங்கிலாந்திற்கு திரும்பச் சென்று, அங்கு பாலுணர்வு கல்வியைக் கொடுப்பதில் முன்னோடியாக விளங்கிய மாரி ஸ்தோப்ஸை (Marie Stopes) சந்தித்தார். மாரி ஸ்தோப்ஸ் லண்டனில், குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனைகளில் முதல் மருத்துவமனையை துவங்கியது மட்டுமின்றி, பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். அவற்றில் "திருமணக்காதல்" / "திருமண அன்பு" (Married Love) என்ற நூல் மிகவும் பிரசித்தி பெற்றது. நீதிபதி அகஸ்டஸ் ஹேண்டு (Justice Augustas Hand) என்ற நீதிபதி, United States Vs One Package 86F, 2d 737 (2d Cir 1934) என்ற வழக்கில், கருத்தடை சாதனங்களை விற்கும்போதோ அல்லது மருத்துவர்கள் அவற்றை உபயோகிக்கும் போதோ அவை ஒழுக்கக்கேடுமில்லை ஆபாசமுமில்லை என்று தீர்ப்பு வழங்கும்வரை, அதாவது 1930கள் வரை, மார்கரெட் சேங்கர் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகியே இருந்தார். இருப்பினும், திருமணமான பெண்கள், கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவதை அமெரிக்காவின் பல மாநிலங்கள் சட்ட ரீதியாக தடை செய்தே

இருந்தன. 1965இல் அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம், க்ரிஸ்வோல்ட் எதிர் கானக்டிகட் (Griswold Vs Connecticut) என்ற மிகவும் முக்கியமான, திருப்புமுனையான ஒரு வழக்கில், கானக்டிகட் மாநிலத்தில் கோம்ஸ்டாக் சட்டத்தை நிராகரித்து, அரசியல் சட்டம் அளிக்கும் பெண்களின் சுதந்திரத்திற்கான உரிமையை பாதுகாக்கும் அடிப்படையில், பெண்கள், கருத்தடை சாதனங்களை பயன்படுத்தலாம் என்ற தீர்ப்பினை வழங்கினார். ஆனாலும் 1983இல் தான் அமெரிக்கா முழுமையிலும் கோம்ஸ்டாக் சட்டத்தின் விதிமுறைகள் முற்றிலுமாக கைவிடப்பட்டன. மார்கரெட் சேங்கர், எம்மா கோல்டமேன் (Emma Goldman) மற்றும் மேரி டென்னெட் (Marry Dennet) போன்ற போராளிகளின் நீண்ட போராட்டங்களினால்தான் இந்த சட்டங்களை எதிர்த்து செயல்பட முடிந்தது.

பெண்களின் கருகலைப்பிற்கான உரிமைகள் பொருத்தமட்டில், அதுவும் மிகவும் கண்டனத்திற்குறிய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. இன்றளவும் பல நாடுகளில் கருக்கலைப்பிற்கான பணிகள் சட்டத்திற்கு புறம்பானவையாகவே கருதப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளில், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டும், கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டில், ஆங்கிலம் பேசும் உலகில், கருக்கலைப்பு என்பது சட்ட ரீதியாக குற்றமாக்கப்பட்டிருந்தது. ஆனாலும் பலவழிமுறைகளைப் பயன்படுத்தி கருக்கலைப்பு செய்யப்பட்டுக்கொண்டுதான் இருந்தது. அமெரிக்காவின் கோம்ஸ்டாக் சட்டம், கருக்கலைப்பு, தொடர்பான விபரங்களை, செய்திகளை உருவாக்குவது, பரவலாக்குவது போன்ற செயல்களைத் தடை செய்தது. 1910களின் போது அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் கருக்கலைப்பிற்கு எதிரான சட்டங்கள் தான் நடைமுறையிலிருந்தன. அதற்கு மாறாக, பிரான்சில், இது குறித்து மிகவும் வெளிப்படையாகவே எழுத்தாளர்கள் விவாதித்தார்கள். தேவையற்ற கருவுற்றலை நிபுணத்துவர்கள் கவனிப்பின் கீழ், பாதுகாப்பான முறையில் கையாள்வது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தது. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இப்படிப்பட்ட நிபுணத்துவரின் கவனிப்பு பெண்களுக்கு மறுக்கப்பட்டதால், அவர்கள் பாதுகாப்பற்ற முறைகளை நாடிச் சென்றனர். அவை மிகவும் அபாயகரமான முறைகளாக இருந்தன. கருத்தடை சாதனங்களுக்கான போராட்டங்களை தொடர்ந்து, உடனடியாக கருக்கலைப்பிற்கான

சட்டங்களைத் தளர்த்துவதற்கான இயக்கமும் ஆரம்பித்துவிட்டது. பிரபலமான ஆங்கில பெண்ணியவாதியான ஸ்டெல்லா ப்ரௌனி (Stella Browne) அவர்கள்தான் முன்னணி போராளியாகத் திகழ்ந்தார். அவர் 1920களில், கருக்கலைப்பிற்கான பெண்களின் உரிமையை அங்கீகரிக்க வேண்டியதின் அவசியம் குறித்து மிகவும் விரிவாக பேசியிருக்கிறார். மற்ற முக்கிய பெண்ணியவாதிகளும் அவருடன் ஒன்றிணைந்தனர். 1936இல் கருக்கலைப்பு சட்ட திருத்த அமைப்பு என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. 1938இல் ரெக்ஸ் எதிர் போர்னி (Rex Vs Bourne) என்ற வழக்கில், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான 14 வயது சிறுமியின் வயிற்றிலிருந்த கருவைக் கலைத்ததிற்கு குற்றஞ் சாட்டப்பட்ட டாக்டர் அலெக் போர்னி (Dr. Aleck Bourne) என்பவரை குற்றமற்றவராக தீர்ப்பளிக்கப்பட்டார். எப்படி இருப்பினும், பிரிட்டனில் முறையான சட்ட சீர்திருத்தம் வருவதற்கு 1967 வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அப்போதுதான் தேசிய நலவாழ்வு திட்டம் (NHS) சட்டத்தின் கீழ், NHS மூலமாக இலவச கருக்கலைப்பு மருத்துவப்பணி, பெண்களுக்குக் கிடைக்கப் பெற்றது. அமெரிக்காவில், 1960களில், கருக்கலைப்பு உரிமை போராட்டங்கள் மிகவும் தீவிரமாயின. அதிக எண்ணிக்கையிலான குழுக்கள் கருக்கலைப்பு குறித்த கருத்துக்கணிப்பு நடத்தி, கருத்துகளை ஒன்றுதிரட்டினர். இந்த குழுக்கள், தேசிய கருக்கலைப்பு உரிமைகளுக்கான செயல்பாட்டமைப்பு (National Abortion Rights Action League (NARAL) என்ற ஒரு குடையின் கீழ் ஒன்று திரண்டனர். இவர்களது தீவிரமான செயல்பாடுகளின் விளைவாக, அமெரிக்காவின் மாநிலங்கள் தனித்தனியாக தங்கள் மாநிலங்களில் கருக்கலைப்பை குற்றப் பட்டியலிலிருந்து நீக்கத் தொடங்கின இந்த போக்கு, மிகவும் பிரசித்திப் பெற்ற ரோயி எதிர் வெய்டு (Roe Vs Wade) என்ற வழக்கில், அமெரிக்க உச்ச நீதிமன்றம் டெக்ஸாஸின் (Texas) கருக்கலைப்பை தடை செய்யும் சட்டமானது, அந்தரங்கத்திற்கான உரிமையை மீறுகின்றது, இது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என்ற தீர்ப்பை வழங்கும் வரை நீடித்தது.

உலகின் பல பகுதிகளில் கருக்கலைப்பு மற்றும் கருத்தடை சாதனங்கள் அரசு மற்றும் மத அமைப்புகளின் கறாரான கட்டுபாட்டில்தான் இருந்தன. குறிப்பாக,

ரோமன் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு மிகுந்த லத்தீன், அமெரிக்கா போன்ற நாடுகளும் மற்றும் இசுலாமிய மதத்தின் செல்வாக்கு மிக்க நாடுகளும், இத்தகைய வசதிகளை நாடிச் செல்வதை தடுத்து நிறுத்துவதை தொடர்ந்தன. 1968இல் டெஹ்ரானின் (Teheran) நடந்த உலக மனித உரிமைகள் மாநாட்டில், திருமணமான தம்பதியர் குடும்ப நலத் திட்டங்களை அணுகுவதற்கான உரிமைகளை உடையவர்கள் என்ற குழந்தைப் பேற்றிற்கான உரிமைகள் உதயமாயின. ஆனாலும், 1974இல் புசாரெஸ்ட் (Bucharest) இல் நடைபெற்ற உலக மக்கள் தொகை மாநாட்டின் போது, அல்ஜீரியா, அர்ஜெண்டீனா மற்றும் போப்பாண்டவரிடமிருந்து, குடும்ப நல திட்டங்களுக்கு எதிராக குரல் எழும்பின. மக்கள்தொகை சம்பந்தமான வெவ்வேறு உலக கூட்டங்களில், தொடர்ந்து, சிறு சிறு மாற்றங்களுடன் கூடிய எதிர்குரல் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. பெருகிவரும் மக்கள்தொகை - குறிப்பாக ஆசிய நாடுகளில் - குறித்த கவலையை இத்தகைய மக்கள்தொகை மாநாடுகள்தான் உலகளவில் ஏற்படுத்தி வருகின்றன. இது குடும்ப நலத்திட்டத்தை, வளர்ச்சித் திட்டங்களில் ஒரு முக்கிய பகுதியாக அங்கீகரித்து அதற்கான இருதரப்பு மற்றும் பலதரப்பு நிதி உருவாக்கத்திற்கும் வழி வகுத்துள்ளது. இருப்பினும், இந்தியா போன்ற பல நாடுகளில் பெரிய அளவில் செயல்பட்டு வரும் இக்குடும்ப நலத்திட்டங்கள் கட்டாயத் திணிப்பாகவும் பெண்களை மட்டும் குறிவைக்கும் வன்முறைச் செயலாகவும் மாறிவருகிறது. பல நாடுகளில் இத்திட்டங்கள் அரசுசாரா அமைப்புகளின் வழியாக செயல்படுத்தப்படுகின்றன. இந்த அமைப்புகள், தேசிய மற்றும் அகில உலக அளவில் செயல்பட்டுவரும் அமைப்புகளின் மத்தியில் பிரிவுகளை உண்டு பண்ணிக் கொண்டுள்ளதால், குடும்ப நலத் திட்டங்களும் சரி, பெண்கள் அமைப்புகளும் சரி இன்றும் பெண்களின் குழந்தைபேறு உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் நிலைதான் உள்ளது.

ஐ.நா.சபை, 1975இல் முதல் உலக பெண்கள் மாநாட்டை மெக்ஸிகோவில் நடத்தியதற்குப் பிறகு, பெண்கள் இயக்கமானது, உலகம் தழுவிய இயக்கமாக உருவாகியது. இந்த மாநாட்டில், ஏற்கனவே உலகின் பல நாடுகளில் செயல்பட்டுக்கொண்டிருந்த பெண்கள் இயக்கங்களிலிருந்து பெண்ணுரிமை

கல்வியாளர்களும், செயல்பாட்டாளர்களும் ஒன்று கூடினர். குழந்தைபேறு உரிமைகள் என்ற கருத்தாக்கமும் இதை நடைமுறைப்படுத்தத் தேவையான தரவுகளும், சேவைகளும் போதிய அளவில் கிடைக்கவில்லை என்பதும் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டன. இந்த குழந்தைப்பேறு நலச் சேவைகளின் பற்றாக்குறைக்கும், பொதுவாக, பெண்களின் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தவதற்கும் இடையே உள்ள தொடர்பும் சுட்டிக்காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், மெக்ஸிகோ மக்கள்தொகை மாநாடு 1984, நைரோபி பாதுகாப்பு தாய்மை மாநாடு 1984 மற்றும் ஐ.நா. சபையின் பெண்கள் பத்தாண்டு என்ற உச்சக்கட்ட அறிவிப்புடன் நிறைவுற்ற நைரோப்பி மாநாடு 1985 போன்ற பல்வேறு உலக அளவிலான கூட்டங்களும் மாநாடுகளும் தொடர்ந்து நடந்தேறின. இந்த நடைமுறைகளினால் பெண்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகள் உலகமயமாயின. குழந்தைப்பேறு நல சேவைகள் பெண்களுக்கு போதிய அளவில் கிடைக்கப்பெறுவது மற்றும் இனப்பெருக்க உரிமைகளை பெண்கள் பயன்படுத்த முடியாமை" போன்ற நிலைகளை நோக்கி உலக கவனம் அதிகமானது. உலகின் பல பாகங்களில், தேசிய மற்றும் பிராந்திய அளவில், பெண்கள் உரிமை மற்றும் நலவாழ்வு உரிமைகளுக்கான அமைப்புகள் நிறுவப்பட்டு, அவற்றின் மூலம் இவற்றிற்கான போராட்டங்கள் வலுப்படுத்தப்பட்டன. அவற்றில் சில – DAWN ( Development Alternatives with women for a NEW Era)– புதிய யுகத்திற்கான மாற்று வளர்ச்சி திட்டங்களை பெண்களையும் இணைத்து உருவாக்குவது – WGNRR (Women Global Network for Reproductive Rights – குழந்தைபேறு உரிமைகளுக்கான பெண்களின் அகில உலக வலைப்பின்னல், LACWHN (Latin American Carribbean Women Health Network) லத்தீன் அமெரிக்க காபியன் பெண்களின்நலவாழ்வு வலைபின்னல், பெண்கள் இயக்கங்கள் உலகளவில் விரிவடைந்ததால், குடும்பக்கட்டுப்பாட்டு திட்டங்களின் வன்முறையான திணிப்பு, மனநலம். பெண்குறியை சிதைப்பது, வெட்டுவது, இளவயது திருமணமும் கருத்தரிப்பும், பாலியல் வன்முறை மற்றும் பாலின அடையாளம் போன்றவைகளையும் உள்ளடக்கிய, பல வகையான பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகள் போன்றவை விவாதத்திற்குட்படுத்தப்பட்டன. இந்த

அமைப்புகளின் கூட்டுச் சக்தியின் விளைவாக, 1993 வியன்னா மனித உரிமை உலக மாநாடு , 1994 கெய்ரோ மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி உலக மாநாடு மற்றும் 1995 பெய்ஜிங் நான்காவது உலகப் பெண்கள் மாநாடு போன்றவைகளில் பெருந் திரளாக பெண்கள் குழுக்கள் பங்கேற்றன. பெண்கள் உரிமைகள் மனித உரிமைகள்தான் என்றும் குழந்தை பேறு மற்றும் பாலுறவுக்கான உரிமைகள் பெண்கள் உரிமை என்றும் இன்று உலக அளவில் ஒருமனதாக ஏற்றக் கொள்ளப்பட்டது இந்த முக்கியமான இரு மாநாடுகளில் தான். ஆனாலும் இன்றும் வாதம் தொடர்கிறது. இதில் முக்கியமான பிரச்சனையாகக் கூறப்படுவது – "இதை எந்தவித மாறுதலுமின்றி கொள்கைகளாக, திட்டங்களாக மாற்றுவதில் சில தடைகள் உள்ளன. அதற்கு காரணம், உலகப் பொருளாதார நிகழ்வு போக்குகளும் சமய மற்றும் கலாச்சார சக்திகளும்தான். இவற்றின் நிறுவன சக்தியானது பெண்ணிய குழுக்களால் அடைய முடியாத அளவு மிக வலிமையானதாக இருக்கின்றது". நூற்றாண்டின் பெரும் பகுதி பெண்கள் தனித்தே மேற்கொண்ட போராட்டங்களில் இனியும் தோள்கொடுக்க வேண்டும் என்பது உண்மையெனில் பாலின சமத்துவத்திற்காக ஆண்கள் மற்றும் பையன்கள் மத்தியில் வேலையை ஆரம்பிக்கவும் அதற்கான பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் இந்த கூற்று பல விதங்களில் ஓர் அறை கூவலாக அமைந்துள்ளது.

## 3. பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமை போராட்டங்களில் ஆண்களின் பங்கு

இந்த போராட்டங்களில் ஆண்களின் ஈடுபாடும் பங்கேற்பும் மிக சொற்பமே. மாறாக, பெண்களின் பாலுறவு மற்றும் குழந்தை பேறு மீதான ஆதிக்க விதிமுறைகளானவை சமூகத்தின் அனைத்து கட்டுமானங்களிலும் ஆழமாக வலுவாக பதித்துள்ளது. இதில் ஆண்கள் தங்களின் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் செலுத்த ஈடுபடு வேண்டியது என்பது கட்டாயமான உட்கருத்தாகும். இப்படித்தான் ஒரு பெண் எப்போது திருமணம் செய்துக்கொள்ள வேண்டும், எத்தனை குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் போன்ற விஷயங்களில், உலகின் பல பகுதிகளில், பெண்களுக்கு மிகவும் சிறிதளவு

அதிகாரமே உள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகளில் தேவையற்ற கருதரிப்பை கலைப்பதற்கான வசதி பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. குடும்பங்களிலும் சமூகங்களிலும் ஆண்களால் அந்த அதிகாரம் நிலைநிறுத்தப்படுகிறது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு அதிகமான ஆண்கள்தான் காரணமாக உள்ளனர். அவர்களில் சிலர் அவர்களது சொந்த குடும்பத்து பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிராகவே வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள். சமூகத்தில் பரவலாக நடைமுறையிலுள்ள பாலியல் பாகுபாடுகள்தான் ஆண்களுக்கு இந்த சலுகைகளை வழங்குகின்றன. இன்றைய பாலியல் அமைப்பு முறையினால் ஆண்களுக்கு கிடைக்கும் இந்த சமத்துவமற்ற சலுகைகளை சில ஆண்கள் மட்டும்தான் எதிர்த்துப் போராடுகிறார்கள்.

## ஆண்கள் - பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள் - அரசு

பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளுக்கான போராட்ட வரலாற்றின் நாயகர்களும் அவற்றை முன்னெடுத்துச்செல்வோரும் பெண்களாகவே இருப்பினும், கொஞ்சம் “ஆண்களை” யும் இந்த பாலுறவு மற்றும் குழந்தை பேறு சம்பந்தமான பிரச்சனைகளில் இணைத்துக்கொள்ளவேண்டிய சூழல் உருவானதற்கு சில குறிப்பிட்ட கவலைக்குரிய போக்குகள் தான் காரணம்.

1. மிகுதியான மக்கள்தொகை - உலகின் தெற்கு நாடுகளில் மக்கள் தொகை அதிகரித்து வருவது வட நாடுகளின் கவலையாக உள்ளது. ஒரு காலத்தில் குடும்பநலத் திட்டத்தின் முக்கியமான குறியீட்டிலக்காக ஆண்கள் இருந்த நிலை மாறி, பெண்களுக்கான கருத்தடை சாதனங்கள் பல்வேறு வகைகளில் கிடைக்கக்கூடிய சூழலில், முழு கவனமும் தற்பொழுது பெண்கள் மீது திசை திரும்பியுள்ளது.
2. நோய் தொற்று – குறிப்பாக எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் - ஆண்கள் பல பெண்களிடம் ஏற்படுத்திக் கொள்ளும் உடல்லுறவு காரணமாக பெண்கள் அதிகமாக இந்நோய்களுக்கு ஆளாகும் நிலை உள்ளது. இதனால் ஆண்களின் பாலுறவு நடவடிக்கைகள் காண்காணிப்பிற்கு உள்ளாகி உள்ளன. இந்நிலை தெற்கு உலகில் அதிகமாக காணப்படுகிறது.

3. வன்முறை குறிப்பாக பாலியல் வன்முறை - திருமண உறவிற்குள்ளும் அதற்கு அப்பாற்பட்டும் நடைபெறும். பாலியல் வன்முறைகள் உட்பட, ஆண்களால் பெண்கள் மீது செலுத்தப்படும் அனைத்து வன்முறைகள் மீதும், வளர்ச்சி கொள்கைகளின் கவனம் திரும்பி உள்ளது.
4. ஓரின பாலுறவு – வரலாற்றைப் புரட்டும் போது ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள் இழிவுபடுத்தப்பட்டே வந்துள்ளனர் என்பதை அறிகிறோம். ஆனால் சமீப காலங்களில், பல நாடுகளில் அவர்கள் தீவிர கவனிப்பிற்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இந்த நான்கு, கொள்கை அளவிலான அக்கறைகளுடன் ஐந்தாவது ஒரு பிரச்சனையும் உள்ளது. அது தனிப்பட்ட ஓர் ஆணின் சொந்த பிரச்சனையாகவும் இருக்கிறது.

5. பாலுறவு செயல்பாடுகளைக் குறித்த பாலுறவு நலம் - எச்.ஐ.வி, எய்ட்ஸ் மற்றும் எஸ்.டி.ஐ போன்ற நோய்கள் ஆண்களின் பாலுறவு நலம் குறித்த அக்கறையை ஏற்படுத்தி இருக்கும் அதே வேளையில், பல நாடுகளில் ஆண்கள் தங்கள் சொந்த பாலுறவு நலம் மற்றும் பாலுறுவு நடவடிக்கைகள் குறித்து கவலைப்பட ஆரம்பித்துள்ளனர். விந்தணு குறித்த கவலையை தெற்காசியாவில் ஆவணப்படுத்தி உள்ளனர். சுய இன்பம் குறித்த கட்டுக்கதைகள் ஏறக்குறைய எல்லாக் கலாச்சாரத்திலும் இருக்கின்றன. சமீப காலங்களில் சைடெனபில் சிட்ட்ரேட் (Sidenafel Citrate) அல்லது “வயாகரா” (Viagra) போன்ற மருந்துகளின் அதிகவேக விற்பனையே ஆண்களின் பாலுறவு செயல்பாடுகள் குறித்த கவலைக்கு ஓர் எடுத்துக்காட்டு, ஆனாலும் இந்த பிரச்சனைக்கு முறையான சேவைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆண்களைப் (குறிப்பாக தெற்கில் உள்ள ஏழை மனிதர்) பற்றிய கீழ்கண்ட உருவகம்தான் மேலோங்கி வருகிறது – நெறியற்ற வகையில் பாலுறவில் ஈடுபடும் ஒரு பொறுப்பற்றவன், இனப்பெருக்கம் செய்பவன் மற்றும் சில சமயங்களில் ஓரின பாலுறவு நடத்தையுடையவன். ஆனாலும் இது வெவ்வேறு காலகட்டங்களில், ஆண்கள் எப்படியெல்லாம் இனப்பெருக்க பாலுறவு நலத் திட்டங்களில்

ஈடுபடுகிறார்கள் என்பதற்கான ஒரு தெளிவான பார்வையல்ல. இந்த திட்டங்களில் ஒன்றான ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சையுடன் மட்டும்தான் (அல்லது ஆண்களுக்கான கருத்தடைத் திட்டம்) ஆண்களுக்கு மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அமெரிக்காவில், 1937இல், இன்று “நல உருவாக்கம்” (Engender Health) அறியப்படும் அமைப்பு, அன்று அமெரிக்க “கருத்தடை அமைப்பு” என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. உயர்ந்த இனத்தின் பாரம்பரியத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கருத்தடை அமைப்பு உருவாகியது. பெண்களுக்கான கருத்தடை முறைகள் அச்சமயம் பயன்பாட்டில் அதிகமாக இல்லாததால், பெரும்பாலும் ஆண்களுக்கே இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இப்படிப்பட்ட இனத்திற்கான கருத்தடை, பரவலாக நாஸி ஜெர்மனியிலும் (Nazi Germany), ஐரோப்பாவின் மற்ற நாடுகளிலும் மற்றும் அமெரிக்காவிலும் செய்யப்பட்டன (பெரும்பாலும் யூதர்கள், குறவர்கள் மற்றும் கறுப்பர்கள் மீது). உலகின் முதல் குடும்ப நலத் திட்டம் 1951இல் இந்தியாவில் தொடங்கப்பட்டது. தொடக்கக் காலகட்டத்தில் ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிகச்சைக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதற்கு தேசிய கட்டமைப்பு (National Building) நிகழ்வு போக்கில், ஆண்கள் மட்டுமே பங்கேற்ற நிலைக்கும் மற்றும் சிறுகுடும்பமே சிறந்தது என்ற தேசிய விருப்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தே காரணம். 2ஆம் உலகப்போருக்கு பிறகு மனித உரிமையுடன் கூடவே “எல்லா மனிதர்களும் பிறப்பால் சமமானவர்கள்”(All Human Beings are Born Equal) என்ற கருத்தாக்கம் முக்கியத்துவம் பெற ஆரம்பித்தபின், இந்த இனக்கருத்தடை மதிப்பிழந்து போனது. இருப்பினும் புதிதாக ஓர் உணர்வு ஆட்டிப்படைக்க ஆரம்பித்தது – மக்கள் தொகை பெருக்கம் பற்றிய பயம் மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்த கவனம் தெற்கு உலகில், மிகக் குறிப்பாக, இந்தியாவில் மேலோங்கியது. இந்தியாவில் 1970களின் துவக்கக் காலங்களில் மாபெரும் ஆண்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கான முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன. “அவசரநிலை” காலங்களில் கொள்கை ரீதியான (இந்த ஆண்களுக்கான சிகிச்சை திட்டம் பின்தங்கி, தேக்கநிலையை அடைந்ததால், 1975 - 77க்கு இடையிலான 18

மாதங்களில், தெருக்களில் காணப்படும் ஆண்களையெல்லாம் வலுகட்டாயமாக இழுத்துவந்து இந்த கருத்தடை அறுவைசிகிச்சையை செய்தனர். இப்படி இச்சமயத்தில் மட்டும் ஏறக்குறைய 12மில்லியன் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆனால், மக்கள்தொகை கட்டுபாட்டிற்காக இந்தியா மட்டும் இந்த ஆண்களுக்கான சிகிச்சையை பயன்படுத்தவில்லை. 1980களில் பெண்களின் வயிற்றில் சிறு அறுவைசிகிச்சை செய்வது மற்றும் லேப்ரொஸ்கோபி முறையில் செய்வது போன்றவை பயன்பாட்டிற்கு வரும் வரை, உலகின் பல நாடுகளில் வலுகட்டாயமாக கருத்தடை அறுவைசிகிச்சைகள் பிரதானமாக ஆண்களுக்கே செய்யப்பட்டன. தங்களின் பாலுறவு மற்றும் குழந்தபேறு நலம் மற்றும் உரிமைகள் மீது வலுகட்டாயமான, வன்முறையான, அரசு கெடுபிடி நடவடிக்கைகளால் மனநிலை பாதிக்கப்பட்ட வரலாற்று அனுபவம் ஆண்களுக்கு இருக்கத்தான் செய்கிறது.

தொடர்ந்து ஆண்களை பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமை திட்டங்களில் ஈடுபடுத்த பல வகையான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் அவற்றில் பெரும்பாலான முயற்சிகள், ஏற்கனவே நடைமுறை வழக்கிலுள்ள - ஆண்மேலாதிக்கத்தை அல்லது தந்தையின் பாசத்தை, அக்கறையை வலியுறுத்தக்கூடிய – பாலுறவு மற்றும் மகப்பேறு நலம் குறித்த முடிவுகளை ஆண்கள் மட்டுமே எடுக்கும், அவர்களின் பாதுகாவலர் பொறுப்பின்மீது கட்டமைக்கப்பட்டவையாகவே உள்ளன. சமீபத்தில்தான், சமூகப்படிநிலையைக் கொண்ட அமைப்பு முறையில் உள்ள, பாலியல் பங்குபொறுப்புகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய புதிய அணுகுமுறையுடன், ஒரு பாலியல் நீதிக்கான வடிவமைக்குள், மேலேக் குறிப்பிட்ட முயற்சிகள் கட்டமைக்கப்படுகின்றன.

**பாலுறவு மற்றும் மகப்பேறு நலத்திட்டங்களில் ஆண்கள் ஈடுபடுவதற்கான அணுகுமுறைகள்:**

| அணுகுமுறை | நோக்கமும் நம்பிக்கைகளும் | திட்டங்கள் பரிந்துரை |
|---|---|---|
| **பெண்களுக்கான பாரம்பரிய குடும்பநலத் திட்டம்** | கருத்தடை சாதனங்களை எங்கும் சர்வசாதாரணமாக இருக்கச் செய்வது, கருதரிப்பை குறைப்பது சிறப்பாக செயல்படும் கண்ணோட்டத்தில் ஆண்களை இணைத்துக்கொள்வது தேவையில்லை | தாய் மற்றும் குழந்தை நல பின்னணியில் கருத்தடை சாதனங்களை பெண்களுக்கு வழங்குவது. |
| **1994 கெய்ரோ உலக மாநாடு - மக்கள்தொகையும் வளர்ச்சியும்** | | |
| **பயனாளிகளாக ஆண்கள்** | ஆண்களின் மகப்பேறு நலத்தேவைகளுக்கானவற்றை செய்வது | பெண்களுக்கு செய்வது போல் ஆண்களக்கும் சில மகப்பேறுநலச் சேவைகளை அளிப்பது ஆண்களை நலப்பணியாளர்களாக பணியமர்த்துவது. |
| **பங்கேற்பாளர்களாக ஆண்கள்** | பெண்களின் நலவாழ்வில் ஆண்களுக்கு முக்கியப்பங்கு இருக்கிறது. | பெண்களின் நலத்தில் அக்கறை செலுத்துவதில் ஆண்களுக்கு பயிற்சியளித்தல். பிரசவத்தின் போதான ஆபத்துகளை கணவன்களுக்கு சொல்லித்தருவது, எப்படி பிரசவத்திற்காக போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது, பெண்களின் நலவாழ்விற்கு எப்படி குடும்ப நலத்திட்டம் உதவுகிறது. |
| **நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தும் முகவர்களாக ஆண்கள்** | ஆண்கள், பெண்களின் நல வாழ்வை மேம்படுத்த பாலின சமத்துவத்தை உருவாக்குவது- அதுவே இறுதி இலக்குமாகும். பாகுபாடுகளை எதிர்கொள்ள ஆண்களின் முழுமையான பங்கேற்பும் ஒத்துழைப்பும் தேவை | எந்த விதமான சேவை வழங்கப்பட்டாலும், திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அவற்றில் தீவிர மாற்றங்களைக் கொண்டுவருவது.<br><br>பரந்துபட்ட வகையிலான செயல்பாடுகள், ஆண்கள் பாலுறவில் பங்கேற்பாளர்கள், தந்தைகள், மற்றும் சமூக உறுப்பினர்கள் என்ற ரீதியில் ஆண்களுடன் பணிபுரிவது. |

## ஆண்கள், பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளும் சமூகமும்:

திட்டக்கொள்கைகள், ஆண்களைப் பார்க்கும் பார்வை ஒருவிதமானதாக, மாற்றிக்கொள்ள முடியாததாக இருப்பினும், பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளைப் பொருத்தமட்டில், ஆண்களுக்கு அரசுடனான அனுபவங்கள் பிரச்சனைக்குறியதாக இருப்பினும், சமூகம் இன்னொரு புறம் ஆண்களையும் அவர்களது பாலுறவு திறனையும், குழந்தையை உருவாக்கும் திறனையும் ஆண்மையையும் போற்றி, அவர்களை வீரர்களாக்குகிறது. பெரும்பாலான சமூகங்களில் இவைகள்தான் ஆண்களின் அதிமுக்கிய பண்புகளாக பார்க்கப்படுகின்றன. சக்தி, ஆதிக்கம், எதிர்க்க முடியாமை, பல பெண்களை திருப்திப்படுத்தும் திறன், ஆண் மகவை பிறப்பிக்கும் ஆற்றல் போன்றவை ஆண்மைக்கான சிறப்பியல்புகளாக பல கலாச்சாரங்களில் போற்றப்படுகின்றன. பல கலாச்சாரங்களில் இந்த வகையான குணங்களை சிறப்பிக்கும் வகையில், சிறுபையன்களின் வளர் பருவத்தில் சில குறிப்பான சடங்குகளை செய்வர். இப்படியாக அவர்கள் வளர்ந்த ஆண்களாகிறார்கள். இன்று, பாலின சமத்துவ கண்ணோட்டத்தில் பார்க்கப்படும் போது, இப்படி சமூகத்தால் விரும்பப்படுகிற இத்தகைய ஆண்மைக்குரிய குணாதிசயங்கள், பெண்கள் மீது ஆண்கள் பிரயோகிக்கும் பாலியல் ஆதிக்கத்தை குறிக்கின்றன; இவை பாலியல் பாகுபாடுடைய நடத்தைகளுடன் தொடர்புடையனவாக இருக்கின்றன; மிகவும் வன்முறையானதாக இருக்கின்றன்; இவை ஒரு சுழற்சியை உண்டுபண்ணுகின்றன. “சிறந்த” ஆண்மைக்கும் அல்லது “ஆதிக்க” ஆண்மைக்கும் பெண்களின் பாலுறவு மற்றும் மகப்பேறு நலனின் மீது சமூகம் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு பல கலாச்சாரங்களில் பலவிதமாக இருக்கின்றது. ஆனால், இதனால் ஏற்படும் விளைவுகள் பெரும்பாலும் ஒரேத்தன்மையுடையதாக இருக்கின்றது. உதாரணத்திற்கு, தெற்கு ஆசியாவை எடுத்துக்கொண்டோம் என்றால் - ஏறக்குறைய 1.7 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள், ஏறத்தாழ உலக மக்கள் தொகையில் ¼ பாகம் - இங்கு, ஆண்மைக்கான இலக்கணங்களுக்கும் இனப்பெருக்க மற்றும் பாலுறவு நலத்திற்கும், அவை சார்ந்த நம்பிக்கைகள், பரம்பரை பழக்க வழக்கங்கள் மற்றும் நடத்தைகளுக்கும் மிக நெருங்கிய,

சிக்கலான உறவிருப்பதை தெரிந்துகொள்ள முடிகிறது. இந்த பிராந்தியத்தில் பலவிதமான பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளுக்கான பிரச்சனைகள் அதிகமாக இருக்கின்றன. இவைகளை தீர ஆராய்ந்தோமானால், இந்த உறவுகள் கீழ்க்கண்டவாறு தெளிவாகப் புலப்படும்.

## இளவயது திருமணம்:

உலகம் முழுவதும் இது ஒரு முக்கியமான பிரச்சனையாக தலைத்தூக்கியுள்ளது. குறிப்பாக தெற்காசிய மற்றும் துணை சகாரா ஆப்பிரிக்காவும்தான் உலகிலேயே மிகவும் கவலைக்குறிய இடங்களாக உள்ளன. வரலாற்று ஏடுகளைப் புரட்டுகிறபோது, இது குறித்த குரல் 130 ஆண்டுகளுக்கு முன்பாகவே எழுந்துள்ளதை பார்க்க முடிகிறது. இதற்கான சட்டங்களை முதல் முறையாக 80 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். துணை கண்டத்தின் பெரும் பகுதிகளில் திருமணம் என்பது ஒரு சமூகத்தின், குடும்பத்தின் பிரச்சனையாக மட்டுமே இருக்கிறது. திருமணம் செய்து கொள்ளப்போகும் தனிநபர்களின் சுயமான முடிவுகளுக்கு சிறிதளவே இடம் இருக்கிறது. இது கௌரவம் மற்றும் கற்புடன் கூடிய தூய்மையுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த கௌரவம் ஆண்களின் தன்மானத்துடனும், கௌரவம், சமூகம், வர்க்கம் மற்றும் சாதியுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. பெண் குழந்தைகள் பருவம் எய்துவது குறித்து நிறைய பயமும் கவலையும் இருக்கிறது. தந்தைமார்கள் தங்களது மகள்களுக்கு இளமையிலேயே திருமனம் முடித்துவிட வேண்டும் என்ற சமூக எதிர்பார்பை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கிறார்கள். மகள்கள் பருவம் எய்துவதற்கு முன்பு எந்த வித பாலியல் பாதிப்புககளுக்கும் ஆளாகிவிடக்கூடாது என்பதற்காக அவர்கள் பருவம் எய்துவதற்கு முன்பாகவே திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். பெரும்பாலும் அப்பெண்கள், பருவம் எய்துவதற்கு முன்பாகவே திருமணம் முடிந்தும் கணவன் வீட்டுக்கு செல்லாமல், தகப்பனார் வீடுகளிலேயே தங்கி விடுகிறார்கள். பருவம் எய்தபின் அவர்கள் கணவன் வீட்டுக்குப் போவதற்கு “இரண்டாம் வழியனுப்பு” நிகழ்வு நடத்தப்படுகிறது. திருமணம் செய்துகொள்வது என்பது

ஆண்மைக்கான மரியாதைக்குரிய அடையாளம். பல இடங்களில் இது சிறுபையன்கள் பருவமெய்ததற்கான ஒரு சடங்கு.

## இளமையில் குழந்தைபேறு:

இளவயது திருமணத்தின் இயற்கை விளைவாகவே இது தெரிந்தாலும் அது அப்படியல்ல. திருமணம் முடிந்த உடன் பெண்கள் தாங்கள் கருத்தரிக்கும் ஆற்றலுடையவர்கள் என்பதையும் (ஆண்கள் தங்களால் கர்ப்பமாக்க முடியும் என்பதையும் அதாவது அவர்கள் ஆண்மையுடையவர்கள் மற்றும் பாலுறவில் ஈடுபடக்கூடியவர்கள் என்பதையும்) நிரூபிக்க வேண்டும் என்ற சமூக அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். காலப்போக்கில் திருமண வயது கூடியிருந்தாலும், சமூக-பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் குழுவினர் மத்தியிலும் கூட முதல் குழந்தைபேற்றிற்கு முன்பாக கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவது மிகவும் அரிது.

## குறைந்து வரும் பாலின விகிதாச்சாரம்:

இந்த பிராந்தியத்தில் இந்த பாலியல் பிரச்சனை மெதுவாக தலைக்காட்டுகிறது. இது குடும்ப அளவு சிறியதாகி வரும் சூழலுக்கும் உயர்ந்துவரும் சமூக பொருளாதார அந்தஸ்திற்கும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. தலைமுறைகளுக்கிடையிலான சமூக பொறுப்புகளின் பின்னணியில் “மகன்”களின் மதிப்பிற்கும், அதனுடன் கூடவே, மகள்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கும், சமூகத்தில் முன்னேறிச்செல்ல வேண்டும் என்ற வெறித்தனமான பெருவிருப்பத்திற்கும் தொடர்பு இருக்கிறது.

**தந்தையாக –** குழந்தையை “பெற்றெடுப்பது” என்பது ஆண்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதிலும் “ஆணை”ப் பெற்றறெடுப்பது இன்னும் சிறப்பானது. பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக்குடும்பங்களாக இருப்பதால், ஆண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்குமான தூரம் என்பது அதிகமாகவே இருக்கிறது. பல குடும்பங்களில் இன்னமும் பால் ரீதியாக தனித்தனியாக வாழ்வது என்பது தொடர்வதால், சிறு பிள்ளைகளை ஆண்கள் கையாளுவதற்கான வாய்ப்பு அடிக்கடி

உருவாவதில்லை. வயதாகிற போது மகன்களுடனான உறவாடுதல் என்பது அவர்களை ஆண்களாக்குவதற்காக கடுமையானதாகவே உள்ளது. பல சூழல்களில், ஆண்கள் வேலையின் நிமித்தம் குடும்பங்களை விட்டு வெளியிடங்களுக்கு செல்கிறார்கள். இதனால் குழந்தை உருவாக்கத்திலோ குழந்தை வளர்ப்பிலோ பங்கேற்கும் சந்தர்ப்பங்களும் குறைவாகிவிட்டன.

ஒரே பிராந்தியத்திற்குள்ளேயே இத்தகைய சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் நடத்தைகளில் பல வகையான வித்தியாசங்கள் உள்ளன. ஆனாலும், இன்றைய சூழலில், பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளை பாதிக்கும் வகையிலான சில பொதுவான சமூக வரையறைகள் இருக்கவே செய்கின்றன. அவை:

— பெண்களுடன் கௌரவத்தை இணைத்திருக்கும் பிரச்சனை – பாதுகாப்பு, கட்டுப்பாடு, மீறுகின்றபோது அவர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை – சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பலவகையான பெண்களுக்கு எதிரான வன்முறைகள் - தண்டனையாக கௌரவக் கொலை முதல் பாலியல் பலாத்காரம் வரை.

— தனிமனித வாழ்க்கை மற்றும் பொதுவாழ்க்கை என இரு பிரிவுகளாக இருப்பது – தனிமனித வாழ்க்கையை பொதுதளங்களில் ஊடகங்கள் முதற்கொண்டு வெளிக்கொணரக் கூடாது. சட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அமைப்புகள் நடைமுறை சட்டங்களையும் செயலூக்கமற்றதாக்கும் சூழல்.

— பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளை பாதிக்கின்ற கலாச்சார ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிற பாலியல் பாகுபாடுடையே நடைமுறைகள்.

— சமூக படிநிலைகளை, மதங்கள், மரபுகள், சிறு சமூகங்கள் / தேசியங்கள் போன்றவை ஒழுக்கநெறிகளாக அங்கீகரிக்கின்ற சூழல்.

— உலகமயமாதலால் ஏற்படும் மாபெரும் சமூக - பொருளாதார மாற்றங்கள். இதில், ஒரு சில குழுக்களிடம் அபரிமித வருமான குவிப்பும் மற்றவர்களிடம் வறுமை அதிகரிப்பும் அடங்கும். தெற்கு ஆசிய நாடுகளில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் முறைசார் உழைக்கும் சக்திகளாக இருப்பது.

— ஆண்மேலாதிக்க விதிமுறைகளில் மாற்றம் கொண்டுவருவதற்கு தடை – இத்தகைய சிந்தனைகளை வெளிக்கலாச்சாரத்தின் "படையெடுப்பாக" பார்ப்பது மற்றும் அடையாளம் சம்பந்தப்பட்டதாக பார்ப்பது, அடிப்படைவாதத்தை வலுப்படுத்துவது.

— பிராந்தியத்தில் நடைமுறையிலிருக்கும் பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகள் சம்பந்தமான செயல்பாடுகள் மற்றும் வழக்கத்திலிருக்கும் பாலியல் நெறிமுறைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முயற்சிப்பவர்கள், மேற்சொன்னவற்றை புரிந்துகொள்வது மட்டுமன்றி அவற்றோடு போராடவும் வேண்டும். இதே மாதிரியான சூழல்தான் தெற்கு உலகின் இதர பகுதிகளிலும் நிலவுகின்றன. இருப்பினும் இந்த குறிப்பிட்ட மற்றும் மாறுபட்ட சமூக கலாச்சார எதார்த்தங்கள் சரியாகப் புரிந்துக்கொள்ளப்படவுமில்லை, பொதுவான உலக வளர்ச்சி முயற்சிகளில் இணைத்துக் கொள்ளப்படவுமில்லை.

## பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளுக்கான போராட்டங்களில் ஆண்கள்:

பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளுக்கான பெண்களின் போராட்டங்களிலும் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தளங்களிலும் ஆண்கள் ஆதரவு அளித்து வரும் செயல்களே, பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமை பிரச்சனைகளில் அவர்கள் தீவிரமாக பங்கேற்கிறார்கள் என்பதற்கு நல்ல உதாரணங்கள். சிகிச்சை கிடைக்கும் என்பதற்காகவும் இருக்கலாம். அமெரிக்காவில் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸை "ஓரினச்சேர்க்கை ஆண்களின் நோய்" (Gay Disease) என்று அறிவித்தபோது, "செயல்பாடு" (ACT UP) என்கிற

ஒரினசேர்க்கை ஆண்களின் அமைப்பு உடனடியாக, இதற்கான மருத்துவ சிகிச்சை கிடைப்பதற்கும். அவை மலிவாக கிடைப்பதற்கும் ஆவன செய்தன. அதேபோல் தென்னாப்பிரிக்காவிலும் சிகிச்சைக்கான அமைப்பு ஒன்று - (Treatment Action Campaign) TAC - தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் மீது அரசியல் சட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்து, இந்நோய்களுக்கான மருந்தாகிய ஆன்டி ரெட்ரோ வைரல் (Anti Retro Viral) அனைவருக்கும் கிடைக்கும் வழி வகை செய்தது.

## 4. ஆண்களும் பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளும் - மாற்றுப் பார்வைக்கான தேவை:

உலக மக்கள்தொகை மற்றும் வளர்ச்சி மாநாட்டின் செயல்திட்டத்தில் (ICPD Program of Action) பாலுறவு மற்றும் இனப்பெருக்க நல உரிமை பிரச்சனைகளில் ஆண்களையும் சிறுபையன்களையும் ஈடுபடுத்த வேண்டிய தேவைப்பற்றி குறிப்பிட்டிருந்தாலும், இன்றுவரை, அதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. இந்த உரிமைகளுக்கான ஒரு பரந்துபட்ட புரிதலுடன் கூடிய அணுகுமுறைக்கு, இத்துறையைப் பொறுத்தமட்டில், பெண்களின் பாதிப்புக்குள்ளாகும் தன்மை, இதற்கான மாற்றுப் பார்வையை வரையறுக்கும் திறனுடைய பெண்களின் தலைமைத்துவம் போன்றவற்றை அங்கீகரிக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அதேசமயம், சமூக விதிமுறைகளின் ரீதியாக பெண்களின் குழந்தைபேறு சம்பந்தமான தெரிவுசெய்யும் உரிமை மீது ஆண்கள் கொண்டிருக்கும் தெளிவான ஆதிக்கம், கட்டுப்பாடுகளைப் பற்றிய புரிதலும் தேவையாக உள்ளது. தனிப்பட்ட ஆண்களின் மீதான சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் வழியாக, ஆதிக்க ஆண்மைகள் சிறந்தவை என்ற கருத்தை இந்த விதிமுறைகள் “கட்டாயமாக்குகின்றன”, இவர்களின் செயல்பாடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பெண்கள் சுயமாக செயல்படுவதைத் தடுக்கின்றன. அவர்களது குழந்தைபேறு நல வாழ்வையும் அதற்கான உரிமைகளை பயன்படுத்துவதையும் பாதிக்கின்றன. இந்த தொடர்புகளைத் தெளிவாக புரிந்துக்கொண்ட ஒரு மாற்றுச் சிந்தனை தேவையாக உள்ளது. அதன் மூலம் தனிப்பட்ட ஆண்கள், ஆண்களின் குழுக்களுக்கு இந்த சமூக எதிர்பார்ப்புகளை உடைத்து சுதந்திரமாக இருக்கவும், அவர்களது சொந்த

மற்றும் இதர அமைப்புகளுடனும் இணைந்து, ஆண்களைப்பற்றிய நேர்மறை பிம்பங்களை உருவாக்கவும் உதவி செய்யவேண்டும். அதாவது ஆண்கள் - அன்பான மற்றும் சம உரிமையுள்ள பங்குதாரர், அக்கறையுடைய மற்றும் வலுப்படுத்தும் தந்தை, பகிர்வுத்தன்மையுடைய சகோதரர், அனைத்திற்கும் மேலாக பெண்கள் சம உரிமைகளை பயன்படுத்தவும், அவற்றை மகிழ்வுடன் அனுபவிக்கவும் உதவுகின்ற, அர்ப்பணிப்புடன் கூடிய ஓர் ஆதரவாளர். மாற்றுச் சிந்தனை மற்றும் இத்தகைய போராட்டங்களில் ஆண்களுக்கான பங்கு போன்றவை சாத்தியம் என்பதை செயல்பாட்டாளர்களாகிய நமக்கு, பாலின சமத்துவத்திற்கான நமது தீவிர செயல்பாடுகளின் அனுபவமே நம்பிக்கையளிக்கிறது. அதிகமான ஆண்கள் இப்பணிகளில் பங்கேற்கவும் செய்கிறார்கள். “ஆண்களின் பங்கேற்பு” என்ற, இந்த ஆண்கள் மற்றும் பையன்களுடன் பாலின சமத்துவத்திற்காக பணிபுரியும் மற்ற அமைப்புகளுடனான ஒருங்கிணைப்பானது, ஆண்களுக்கும் பையன்களுக்குமான புதிய பங்குபாத்திரங்களை வரையறுப்பதற்காக, பல இடங்களிலுள்ள பெண்ணுரிமை செயல்பாட்டாளர்களோடு எப்படியெல்லாம் இணைந்து செயல்படலாம் என்பதை புரிந்துகொள்ளவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு ஆர்வமாக உள்ளது.

### இந்த முயற்சிகளின் பொதுப்படையான நோக்கங்கள் கீழ்வருமாறு:

- அனைத்து மட்டத்து வலைப்பின்னல் உறுப்பினர்களுக்கு இதற்கான திறன்களை மேம்படுத்துவது.

- பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளுக்காக பணிபுரியும் சமூக இயக்கங்கள், இதர அமைப்புகள், பெண்கள் நலவாழ்வு உரிமைகளுக்கான இயக்கங்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்வது.

- நிலவும் பாலியல் பாகுபாடுகளுடைய சமூக விதிமுறைகளை எதிர்க்கவும், பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளுக்கான மாற்று நடத்தைகளை ஏற்றுக்கொள்ள வைக்கவும் எடுக்கப்படும், பகுதிவாரியான, தேசிய, பிராந்திய அளவிலான பிரச்சாரங்களுக்கு ஆதரவு அளிப்பது.

- பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகளுக்கான பாலியல் புரிதலுடன் கூடிய பணிகள், அனைவருக்கும் கிடைப்பதற்காக, பகுதி தேசிய மற்றும் உலக அளவில் அரசு அதிகாரிகள் மற்றும் கொள்கை வரைவாளர்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படும் அனைத்து வழக்காடல்கள், விவாதங்களுக்கு வலுவூட்டும் வண்ணம் ஆதரவு பணிகளில் ஈடுபடுவது.

உலகின் பல பகுதிகளில் உள்ள கலாச்சாரங்கள் மற்றும் நடைமுறைகளை கவனத்தில் கொண்டு, இந்த கருத்துத்தாளின் ஒரு சில பகுதியில், சில பொதுவான கொள்கைகள் சுட்டிகாட்டப்பட்டுள்ளன. ஒருங்கிணைப்பின் உறுப்பினர்கள் தங்கள் பகுதியின் தேவைகள், நிலவரங்களை மனதில் கொண்டு தங்களது சுயமான செயல் திட்டங்களை வகுக்கும்போது, இந்த கெள்ளைகளையும் கருத்தில் வைத்துக் கொள்வது நலமாக இருக்கும்.

## 6. நினைவிலிருந்து நனவுவரை: சில வழிகாட்டு நெறிமுறைகள்:

பகுதி எதார்த்தங்களை பற்றிய அடிப்படை புரிதலை உருவாக்குவது - உலகம் முழுவதும் பெண்களின் குழந்தைபேறு மற்றும் பாலுறவு நலம் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் எதார்த்த நிலை ஏறக்குறைய ஓரே விதமாகவும், சில சமயங்களில் வித்தியாசப்பட்டும் உள்ளன. உலகின் அந்தந்த பகுதிகளில், ஆண்கள் என்றால் என்ன என்பதற்கான வலியுறுத்தல்களும், சமூக எதிர்பார்ப்புகளும் இவற்றை மீண்டும் மீண்டும் பலப்படுத்துகின்றன. தற்போதைய நிலவரத்தை மாற்ற வேண்டுமானால் இவற்றை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டு எதிர்பார்ப்புகளின் வலிமையும், செல்வாக்கும் ஆண்களின் மீது மிக அழுத்தமாக உள்ளது. இதனால், அவர்கள் தாங்கள் ஆண்கள்தான் என்பதை நிருபிப்பதற்காக, எந்தவித ஆபத்தையும் எதிர்கொள்ளவும், எந்த எல்லைக்கும் போக எத்தனிக்கிறார்கள். சமூகத்தில் தங்களின் மதிப்பை நிலைநாட்ட வேண்டிய காட்டாயத்தில் தங்களுக்கே ஏற்புடையதாக இல்லாத விதங்களில், தனிமனிதர்கள் நடந்து கொள்ள வேண்டிய சூழலுக்கு அது இட்டுச் செல்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், குழந்தைபேறு மற்றும் பாலுறவு நல தளத்தில் தனிமனிதரின் நடவடிக்கைகளை மாற்றுவதற்காக முயற்சிப்பதும், அதை தொடர்ந்து

முன்னெடுத்துச் செல்வதும் கடினமாகிறது. இந்தியா போன்ற நாடுகளில் காப் பஞ்சாயத்து (Khap Panchayat) போன்ற பாரம்பரிய அமைப்புகளின் மூலம், ஆண்கள் தனிநபராக விதிகளை மீறும்போது (சாதி எல்லைக்கு வெளியே திருமணம் செய்வது) கூட்டாக தண்டனை வழங்க முடிவு செய்வது போன்றவை தனிமனிதன் மீது இந்த கூட்டு எதிர்பார்ப்புகள் செலுத்தும் ஆதிக்கத்தின் வலிமையை நிருப்பிப்பதாக உள்ளது. இந்த சமூக விதிமுறைகள், பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்கள் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் மேலும் மேலும் பலப்படுத்தப்படுகின்றன. (கீழே உள்ள அட்டவணையை பார்க்கவும்)

*படம் 1 : பாலியல் ஒரு சமூக படிநிலை அமைப்பு முறை*

**பாலியல் பங்குகள் குடும்பத்தில் மற்றும் சமூகத்தில்**

பாலியல்படுத்தப்பட்ட உறவுகள்

- கணவன், மனைவிக்கு இடையில்
- சகோதரன், சகோதரிக்கு இடையில்
- பெற்றோர், மகன் மற்றும் மகளுக்கு இடையில்

சமூக வரையறைகள்

வள ஆதாரங்கள் மீதான கட்டுப்பாடு மற்றும் பெறுவதிலுள்ள வேறுபாடு

- குடும்ப பொருளாதார வளங்கள்
- சமூக வளங்கள்
- அரசியல் வளங்கள்

ஆண் என்பதற்கான சமூக எதிர்பார்ப்புகள்

- அங்கீகாரத்தின் மூலம் ஒப்புதல் / சமூக வரையறைகளை வலியுறுத்தல்

உலகின் தெற்கே பல நாடுகளும் காலனி ஆதிக்க நாடுகளாக இருந்தவையே. அதனால் காலனி ஆதிக்க காலத்தில் சமூக சீர்திருத்த சட்டங்கள் உருவாகி இருந்திருக்கும் அல்லது புதிய மற்றும் அதிகமான சமத்துச் சட்டங்கள் உலக அளவிலான ஒத்துழைப்பு, ஆதரவுடன் இயற்றப்பட்டிருக்கும். பெண்களின் அந்தஸ்து சம்பந்தமான சட்டங்கள் எத்தகைய சமூக ஆதரவை பெற்றிருக்கின்றன என்பதை கண்டறிவது மதிக்கத்தக்க செயலாக இருக்கும். பல சமயங்களில் பெண்ளுக்கான குழந்தைபேறு நல சேவைகளை ஆதரிக்கக் கூடிய கொள்கைகள், சட்டங்கள் இருக்கலாம். ஆனால் கூட்டாக ஆர்வமின்றிருப்பது அல்லது சேவை அளிப்பவர் மத்தியில் ஆதரவின்மை மற்றும் / அல்லது சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அமைப்புகள், சம்பந்தப்பட்ட சட்டம் பெரும்பாலும் நிறைவேற்றபடாமலிருப்பதை உறுதி செய்யும் வகையில் இருக்கலாம். இந்தியாவில் இதுபோன்று அபரிமிதமான கொள்கை உடன்படிக்கைகள் இந்த தலைவிதிக்கு ஆளாகி துன்புறுகின்றன. அவற்றில் இளவயது திருமணத்தை தடை, வரதட்சணை தடுப்பு மற்றும் கருக்கலைப்பிற்கான சட்டங்கள் அடங்கும் பகுதியிலுள்ள ஆண்மேலாதிக்க சக்திகள், இப்படி நன்மைத் தரக்கூடிய வளர்ச்சித் திட்டங்களை முடக்குவதன் மூலம் தங்களது அந்தஸ்தை தக்கவைத்து கொள்கின்றன. இருப்பினும், பாரம்பரிய சமூகங்கள் இந்த மாற்றப்போக்கில் தொடர்ந்து கலந்தாய்வு செய்து கொண்டுதான் இருக்கின்றன. தங்களது அடிப்படை ஆண்மேலாதிக்க ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்காமல், அதே சமயம் பெண்களுக்கான, பெண்களின் சில புதிய வெளியை அனுமதிக்கின்றன. நடப்பு உலகமயமாக்கப்பட்ட நவீன தாராளமய பொருளாதார திட்டம் இத்தகைய சமூக கலந்தாய்வுகளுக்கு சரியான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இப்படி இந்தியாவில், சந்தையில் பங்கெடுப்பதற்கான பொருளாதார வளங்களை அடைவதற்கான வாய்ப்புகளை பெண்கள் பெற்று வருகிறார்கள். ஆனாலும் குடும்பங்களால் வரையறுக்கப்பட்ட அளவுகோளின்படிதான் திருமணங்கள் நடக்கின்றன: வரதட்சணை சந்தை எகிறி வருகிறது மற்றும் மகன்களுக்கான பெருவிருப்பம் பரவலாகிவருகிறது. இன்னொரு பக்கம், பெண்களின் வெளிநடமாட்டம் அதிகரித்துள்ளது. அதிகமான இளம் பெண்களும் ஆண்களும் திருமணத்திற்கு முன்பே பாலுறவு கொள்கிறார்கள். என்றாலும், கருத்தடை என்னும்

பொறுப்பு பெண்களுடையதாகவே (அதுவும், அவசர கருத்தடைகள் என்ற அளவிலேயே) இருக்கிறது. பையன்கள் பெண்களின் திருமணம் இன்னமும் குடும்பங்களால் நிச்சயிக்கப்பட்டதாகவே உள்ளன.

**பெண்களின் போராட்டங்களுடன் தோழமை** - சமூகத்தில் பாலியல்படுத்தப்பட்ட உறவுகளில் மாற்றுவதற்கு புதிய தலையீட்டு முறைகளைத் தெரிவு செய்வதில் உள்ள முக்கியமான சிக்கல், பகுதி நிலவரத்தை கணக்கெடுப்பது / சமூக மாற்ற செயல்பாடுகள், தலையீடுகளின் பால் ஆர்வத்தை உண்டுபண்ணுவது, போன்றவைதான். எம்.டி.ஜி (MDGs) மற்றும் எஸ்.டி.ஜி (SDGs) போன்ற திட்ட நிகழ்வு போக்குகளின் மூலம் வளர்ச்சிக்கான திட்டங்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வதினால், பல நாடுகளில் வளர்ச்சிக்கான பணித்தளம் உருவாகி இருக்கிறது. உலக அளவிலான அரசு சாரா அமைப்புகள் (NGOs) மற்றும் சில நேரங்களில் உள்ளூர் வளர்ச்சி நிறுவனங்களுக்கும் (NGOs) நிதி உதவி செய்து, இந்த வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றும் பணியில் அரசாங்கங்களுக்கு ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பும் கொடுக்கப்படுகிறது. கருத்தடை சாதனங்களின் பயன்பாடு மற்றும் தாய் நல சேவைகள் போன்ற குழந்தைபேறு பிரச்சனைகள் இந்த செயல்பாட்டு தொகுதியின் கீழ் வருகிறது. இன்னொரு பக்கம் அதே நாடுகளில் உள்ளூர் பெண்கள் குழுக்கள், மனித உரிமை குழுக்கள் மற்றும் சமூக இயக்கங்கள் கருக்கலைப்பிற்கான உரிமைகள் மற்றும் எல்.ஜி.பி.டி (LGBT) உரிமைகள் எங்கெல்லாம் சட்டரீதியாக்கப்படவில்லையோ, அங்கெல்லாம், அவைகளுக்காகவும், இன்னும் அதிகமான சுயசார்பு சூழலுக்காகவுமான போராட்டங்களில் மூழ்கியுள்ளன. சமூக உறவுகளில் குழந்தைபேறு மற்றும் பாலுறவு தளத்தில் பெண்கள் ஆண்களுக்கு இடையில் உள்ள உறவுகளில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரும் நோக்கமுடைய குழு, இந்த ஒரே மாதிரி காணப்படும் இரண்டு வகையான செயல்பாட்டு குழுக்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனுடைய செயல்பாடுகள் மற்றவர்களை, குறிப்பாக சுயசார்பு சமூக இயக்கங்களால் மற்றும் பெண்ணுரிமை குழுக்களை எப்படி பாதிக்கும் என்ற எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பல இடங்களில், பல நேரங்களில் பெண்கள் குழுக்கள் சுட்டிக்காட்டும் மற்றொரு பிரச்சனை, பெண்களுக்கான உரிமைகளை மீட்டெடுக்கும் மற்றும் பெண்களை வலுப்படுத்தும் அடிப்படையில் செய்யப்படும் மிகவும் முக்கியமான வேலைக்களுக்குப் பதிலாக, 'ஆண்களுடன் செய்யும் பணிகளுக்கு" (Work with Men) நிதி அளிக்கும் நிதி நிறுவனங்களின் அதிகபடியான ஆர்வம். பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகள் தளத்தில் சில கருத்துக்கள் அவற்றின் நோக்கங்களுக்கு மாறானதாக இருக்கலாம். இதனால் அவைகளுக்கு அரசு மற்றும் தனியார் நிதி உதவி குறைவாகவே கிடைப்பது வழக்கம். பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளுக்காக ஆண்களுடன் பணிபுரியும் ஓர் அமைப்பு தனக்கான வரையறைகளை வகுத்துக் கொண்டு, அதே உரிமைகளுக்காக பணிபுரியும் மற்ற அமைப்புகளுடனான குறிப்பாக அரசு ஏற்றுக் கொள்ள கூடிய எல்லைக்குள் பணிபுரியும்அமைப்புகளுடனான உறவுகளையும் வரையறுத்துக் கொள்வது அவசியமாகிறது. வெகுகாலமாக இந்த பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகள் கண்டனத்துக்கு உரியவைகளாக இருந்ததையும் இன்னும் அப்படித்தான் என்பதையும் கவனிக்க வேண்டியது மிக முக்கியமானது. இந்த தளத்தில் இது வரை பல முன்னேற்றங்கள் சாத்தியமாகி இருப்பதற்கு, பெண்களும் பெண்கள் குழுக்களும் மரபு ரீதியான ஞானத்தையும் சட்ட எல்லைகளையும் எதிர் கொண்டதுதான் காரணம். ஆண்களுடன் பணிபுரியும்போது, இந்த குழுக்களை தனிமைப் படுத்திவிடவோ அல்லது புறங்கணித்துவிடவோ கூடாது என்பதில் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். நடைமுறை அளவில், ஆண்களின் பங்கேற்பு ஒருங்கிணைப்பின் உறுப்பினர்கள், பெண்களின் சுயசார்பு போராட்டங்களில் ஈடுபடும் செயல்பாட்டாளர்களையும் தங்களது திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் மீள்பார்வையின்போதும் இணைத்துக் கொள்ள முயற்சிக்கலாம். நமது பணிகளை, யாரும், ஆண்களால், ஆண்களுடன் மற்றும் ஆண்களின் பணிகள் என்றோ அல்லது பெண்களின் பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளுக்கானது மட்டும் என்றோ கணித்துவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அந்தந்த குறிப்பிட்ட பகுதி அளவிலான பெண்களின் போராட்டங்களோடு தொடர்பு கொண்டு அவற்றில் பங்கெடுக்கவும் வேண்டும்.

## ஆண்களின் செயல்பாடுகளுக்கு பொறுப்பாண்மை :

சமூக அளவிலோ அல்லது ஒருங்கிணைந்த போராட்டங்கள் அளவிலோ பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளுக்கான நமது பணிகளை திட்டமிடும்போதும், அவற்றை செயல்படுத்தும்போதும், அதே வேளையில் வேளையில், அங்கு பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறை நிகழ்ச்சிகளோ மற்றும் அரசு நிறுவனங்களின் பெண்ணுரிமை மீறல்களோ கூட நடக்கலாம். அப்போது ஆண்களின் பங்கேற்பு வலைபின்னல், அந்த நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து, புரிந்து செயல்பட வேண்டும். அதற்காக பெண்கள் இயக்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் கைகோர்க்க வேண்டும. ஆண்களுடனான செயல் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள், அப்பகுதி பாலியல், பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளின் சூழல் எப்படி உள்ளது என்பதை தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு ஏற்றாற்போல் எதிர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பாலியல் தொடர்பான வன்முறைகளில் ஆண்கள் எப்படி சம்பந்தப்படுத்தபடுகிறார்கள் என்கிற இந்த விழிப்புணர்வும், அதற்கு ஏற்ப நடவடிக்கைள் எடுப்பதும், பகுதி பெண்கள் குழுக்களுடன் தோழமையும், அவர்கள் முன்னெடுத்துச் செல்லும் போராட்டங்களை வலுப்படுத்த உதவியாக இருக்கும்.

## ஆண்களுக்கான சலுகைகளை ஆராய்வதும் மற்றும் மாற்றத்திற்கான செயல்பாடுகளும்

பாலியல் இயல்பு மாற்றங்களுக்காக ஆண்கள் மற்றும் பையன்களுடனான நமது பணிகளின் அனுபவம், இந்த ஒட்டுமொத்த நிகழ்வுபோக்கில் ஆண்களின் விமர்சன கண்ணோட்டம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்த்தி இருக்கிறது. எந்தவகை அணுகுமுறையையும் பயன்படுத்தினாலும் பரவாயில்லை, ஆனால், ஆண்கள், அவர்கள் சொந்த வாழ்வில், பெண்களுடனான தனிப்பட்ட உறவுகளை எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதை, அவர்களை நினைக்க வைத்து, அதுபற்றி சிந்திக்க செய்ய வேண்டும். இந்த, தங்களையே ஆழ்ந்து நோக்கும் செயலானது ஆண்களையும் பையன்களையும் சமூக உறவுகளிலுள்ள படிநிலைத்தன்மையையும் மற்றும் அவர்களது சொந்த நிலையையும், அவர்கள் அனுபவிக்கும்

சலுகைகளையும் புரிந்து கொள்ள உதவும். பாலியல் சமத்துவம் மற்றும் சமூக நீதி என்ற கண்ணோட்டத்தில் இத்தகைய சலுகைகளை புரிந்து கொள்வது, தனிமனித மாற்றத்திற்கு உதவும் ஒரு சக்தி வாய்ந்த உந்துதலாக இருக்கும். இந்தியாவில், பாலின ரீதியாக பிரிந்துள்ள சமூக சூழலில், தனிமனிதர்களாக ஆண்கள், தங்கள் சொந்த வாழ்வில், பெண்களுடனான உறவுகளில் தீவிரமான மாற்றங்கள் உருவாகி இருப்பதை உணர்கிறார்கள். பாலுறவுகளில் நெருக்கமான உள்ளார்ந்த ஈடுபாடுகளிலிருந்து, குழந்தை பராமரிப்பு அல்லது வீட்டு வேலைகளில் பங்கேற்பது, பெண்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்களது வெளி நடமாட்டத்தை ஆதரிப்பது வரையிலான உண்மையான மாற்றங்கள் அதிகமாகி இருப்பது என்பதே இந்த மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை உணர்த்துகின்றன. இப்படிப்பட்ட திட்ட தலையீடுகளும், அதன் மூலம் அளிக்கும் தகவல்களும், செய்திகளும், பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளுக்கான செயல்பாடுகளாக “கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவது” மட்டுமல்லாமல், உதாரணத்திற்கு பெண்களின் சமூக மற்றும் குழந்தை பேற்றினைக் குறித்து சுயமாக முடிவெடுக்கும் உரிமைகளை பாதிக்கின்ற, பாகுபாடன சமூக விதிமுறைகளோடு தொடர்புபடுத்தப்பட்டும் இருக்க வேண்டும். அதே நேரம், தந்தை பாசம், பெண்களுக்கு அதுதான் பாதுகாப்பு என்ற நேச வலைகளை குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். பெண்களின் பாதுகாப்பு, வன்முறை மற்றும் மற்ற வகையான உரிமை மீறல்களிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை, ஆண்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில், தொடக்கத்தில் பயன்படுத்தினாலும், இத்தகைய கருத்துகள்தான் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஆண்மேலாதிக்க அமைப்பில் நிலையாக அமர்ந்திருக்கிறது என்பதையும், இவைதான் சிறந்த ஆண்மைக்கு கட்டாயமாக இருக்க வேண்டிய அம்சங்களாக உள்ளன என்பதையும் புரிந்து கொள்வது அவசியம்.

## மாற்றத்திற்கான பகுதியளவிலான மற்றும் ஒருங்கிணைந்த முறையிலான நோக்கங்களை உருவாக்குவது

வளரும் நாடுகளில், மரபு சார்ந்த சமூகங்கள் பல, நவீன தாரளமயமான வளர்ச்சி திட்டகளுடனான மோதல்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதை விட்டுக்கொடுப்பது என்ற ஒரு விஷயத்தில், மரபு சமூகங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பார்கள். அதனால் பாதிப்புகளுக்கும் உள்ளாவார்கள். இந்த போராட்டங்கள் அத்தகைய விளைவுகளை ஏற்படுத்துவதாகத்தான் இருக்கும். உலகின்பல பாகங்களில் அடிப்படைவாதம் மேலோங்குகிறது என்பதே, “வெளிநாட்டு” சிந்தனை என்று புரிந்துகொள்ளப்பட்டுள்ள இந்த புதிய சிந்தனைகளால் மரபு ஆண்மேலாதிக்கங்களும் ஆண்மைகளும் ஏற்கனவே அச்சப்பட்டிருப்பதற்கான சான்றாகும். இந்த சிந்தனைகளுக்குத் தேவையான ஆதரவை வளர்த்தெடுக்காமல், பொதுக் கொள்கைகளிலும், திட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துத்துவதற்கான முயற்சிகள் பெரும்பாலும், இந்த மரபு சமூகங்களில் எந்தவித பலனையும் ஏற்படுத்தாது. பகுதியில் நடந்த ஒரு “சம்பவத்தை” பயன்படுத்தி, அதன்மூலம் பாலியில் உறவுகளில் ஏன் மாற்றம் தேவை என்ற சிந்தனையை வளர்த்தெடுத்து, அதனால் ஆண்களின் சிந்தனையில் நிலைத்த, ஆழமான பாதிப்பை ஏற்படுத்துவது என்பது தான், தற்சமயம் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் முக்கியமான ஒரு பாகமாக இருக்க முடியும். பாலினத் தேர்வு முறைகளால் இந்தியாவில் ஆண் பெண் விகிதாச்சாரம் குறைந்த பிரச்சனைகயை எதிர்கொள்ள, “பாவம்” அல்லது “சட்டத்திற்கு புறம்பானது” என்ற இரு கருத்துகள் பரவலாக பயன்படுத்தப்பட்டன. ஆனால் இரண்டும் எதிர் விளைவுகளைத்தான் ஏற்படுத்தியிருக்கின்றன. முதலில் இது ஒழுக்கநெறியை பயன்படுத்தியது. இதே ஒழுக்கநெறிகள் தான் பாகுபாடான நடைமுறைகளை நியாயப்படுத்தின. கருக்கலைப்பை ஒரு “பாவம்” என்ற கருத்து எதிர்வினையை ஏற்படுத்தியதால், பெண்களுக்கு பாதுகாப்பான முறையில் கருக்கலைப்பு தேவை என்று அதனுடன் ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. இரண்டாவதாக எடுத்த முயற்சியைப் (சட்டத்திற்கு புறம்பானது) பொறுத்தமட்டில், ஏற்கனவே பெண்களின்

சமூக அந்தஸ்தை உயர்த்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட பல சட்டங்களை சீரியவையாக ஆரம்பத்தில் எடுத்துக் கொள்ளாத நிலையில், சமூக நோக்கத்தை அவை பிரதிபலிக்காத நிலையில் அதுவும் பலனளிக்கவில்லை. இப்படி இரண்டும் சீறிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தங்களது சொந்த வாழக்கையில், உறவுகளிலும், பாலுறவு மற்றும் குழந்தைபேறு நல உரிமைகளும் சம்பந்தப்பட்ட நடத்தைகளிலும் பாலியல் மாற்றத்தை கொண்டுவருவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த, தனிப்பட்ட ஆண்கள் ஒன்றுகூடி, நண்பர்கள் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, அவர்களுக்கு இந்த சமத்துவம் மற்றும் பாலியல் நீதிக்கான அவசியத்தை உணர்த்தி, அவற்றை மதிக்க செய்யும் முயற்சிகள்தான், இந்த பிரச்சாரத்தின் முக்கியமான சவாலான பகுதியாக இருக்க முடியும். நிலவும் பாலியல் உறவுகளின் கட்டுப்பாட்டு மையத்தை, குறிப்பாக, பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பால் நகர்த்த முயலும் அதேசமயம், ஒரு புதிய நியாயமான பகுதி பிரச்சனைகயை, தற்போதைய சமூக நோக்கங்களை ஆழமாக எடுத்துக் கூறக்கூடிய வகையில் வளர்த்தெடுப்பது அவசியமாகிறது. இது ஏதோ கடினமாக தோன்றினாலும் அது கடினமானது அல்ல. ஏனென்றால், ஏற்கனவே பல நாடுகளில் பொதுவாழ்வில் பங்கேற்கவும் அல்லது பெண்களுக்கான நலவாழ்வு சேவைகளின் மேம்பாட்டிற்காவுமான போராட்டங்களில், பிரச்சனைகளில், அதிகமான பெண்கள் களமிறங்கி இருக்கும் சூழல் உருவாக்கப்பட்டுவிட்டது. பாலியல் உறவுகளில் மாற்றம் தேவை என்ற நோக்கங்களுக்காக கூட்டு முயற்சிகள் உருவாக்கப்படவில்லை என்றால், தனிப்பட்ட ஆண்களுக்கு, தங்கள் சொந்த வாழ்வில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மாற்றங்களை தொடர்ந்து நிலைநிறுத்தம் செய்வது கடினமாகிவிடும். ஏனெனில் படம் ஒன்றில் காட்டப்பட்டிருப்பதுபோன்று, ஆண்களின் மீதான, சிறந்த ஆண்மைகளுக்கான கூட்டு எதிர்பார்ப்பானது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும். இது ஒரு சுழற்சி அமைப்பு. இந்த அமைப்பு. உடைக்கப்பட வேண்டும் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

## பொதுக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மாற்றுவது

இந்தப் புரிதலின் அடிப்படையில்தான் அடித்தட்டு மக்கள் அளவிலான சமூக மாற்றங்களுக்கான முக்கியமான வாதங்களையும் பரிந்துரைகளையும், உலக அளவிலான உடன்படிக்கைகளின் நியாயப்படியும் மற்றும் அதன் முன்னேற்றத்தையும் கண்காணிப்பதற்கான காரியங்களாக பெரும்பாலும் பார்க்கப்படுகின்றன. ஏற்றுக் கொள்ளப்பட்ட உலக குறியீடுகளின் அடிப்படையில், உலக வளர்ச்சி உதவியும் மற்றும் தேசிய வளர்ச்சியும் இருக்க வேண்டும் என்பதோடு தொடர்புடையது. இதனால், கண்காணிப்பு மற்றும் மதீப்பீடு செய்வதற்கான ஒரு புதிய தொழிலே வளர்ந்திருக்கிறது. சில தனிப்பட்ட நாடுகளை, அவை ஏற்படுத்தியிருக்கும் முன்னேற்றத்திற்காக பாராட்டும் அதே, சமயம் நடத்தை மாற்றத்திற்கான நியாயமாக, 'எண்ணிக்கையளவிலான மாற்றத்தை' உலகளவிலான மாற்றத்தோடு ஒப்பிடுவதாகிறது. ஏனெனில், பல வளர்ச்சி தலையீடுகள் தனிநபர் அளவிலேயே நடக்கின்றன. ஆனாலும், அமைப்புத்திறன், போதிய நிதி ஆதரவு, ஊழல் / கண்டுகொள்ளாதத்தன்மை மற்றும் 'அரசுத் தன்மை' போன்றவை பெரும் எண்ணிக்கையிலான நாடுகளை, விரும்பும் மாற்றங்களை அடைய முடியாமல் செய்கின்றன. (RSHR) தளத்தில் மாற்றங்களைச் கொண்டு வருவது மிகப்பெரும் சவாலாக இருக்கிறது. ஏனென்றால், பல நாடுகள் உலக அளவில் இத்தகைய மாற்றங்களுக்கு எதிராக உள்ளன. உதாரணத்திற்கு, ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள், "சிடா"(CEDAW) எனக் கூறப்படும் பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிக்கும் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதில் / கையொப்பமிடுதலில் ஆட்சேபணைகள் எழுப்பி வருகின்றன. இன்றுவரை இதில் எதிலும் மாற்றமில்லை. பெரும்பாலான ஆட்சேபணைகள் விதி 5 மற்றும் 16இன் மேல் எழுந்துள்ளன. இந்த விதிகள், பாரம்பரிய நடைமுறைகள், திருமணம் மற்றும் குடும்ப உறவுகள் சம்பந்தப்பட்டன. இவை, பாலுறவு மற்றும் குழந்தைபேறு நலம் மற்றும் அவற்றிற்கான உரிமைகளைப் பற்றிய பிரச்சனைகள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனால் உலக உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை யாரும் மறுத்துவிடவில்லை. ஆனால் இதுமட்டுமே பொதுக்கொள்கைகளை

மேம்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகளாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

பெண்களுக்கு குழந்தைபேறு நல சேவைகள், ஆண்களுக்கு குறிப்பாக கருத்தடை மற்றும் எஸ்.டி.ஐ / எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் போன்ற பிரச்சனைகளுக்கான சேவைகள் கிடைப்பதற்கு ஆதரவான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவிசெய்யும் கொள்கைகளை மேம்படுத்து கோரிக்கைகளுக்கான பிரச்சாரங்கள், போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய, ஒப்பற்ற நிலையில் இப்போது ஆண்கள் பங்கேற்பு வலைப்பின்னல் இருக்கிறது. இந்த நடவடிக்கைகளை அவர்கள் தேசிய மற்றும் பகுதிவாரியாக கொண்டு செல்ல வேண்டிள்ளது. பல தேசிய மற்றும் உலக அளவிலான ஒப்பந்தங்களில் கூறப்பட்டுள்ள பொதுவான சேவைகளை நடைமுறைபடுத்த, இந்த பகுதியளவிலான கொள்கை மாற்றங்கள் அத்தியாவசியமாக இருக்கிறது. இவற்றை அந்தந்த பகுதிக்கு குறிப்பான கோரிக்கைகளுக்கும் பயன்படுத்தலாம். பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து இந்த கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். பெண்கள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளாக இல்லாமல் இருப்பது நல்லது. இல்லையென்றால் அது ஏதோ பெண்களுக்காக ஆண்கள் செய்யும் பாதுகாப்பு நடவடிக்கைகளாக பார்க்கப்பட்டுவிடும். கொள்கை மாற்றத்திற்கான கோரிக்கைகளை வைப்பதற்கு முன்பாக, ஆண்களின் குழுக்கள், அவர்களது சொந்த பாலியல் மதிப்பீட்டு முறைமைகளையும் பாலுறவு மற்றும் மகப்பேறு நல உரிமைகள் தொடர்பான நடத்தைகளையும் சீர்தூக்கிபார்ப்பது மட்டுமல்லாமல், அவற்றை மாற்றுவதற்கான வேலைகளையும் செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களது சொந்த நடவடிக்கைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் எந்தவித முரணுமில்லை என்பது உறுதிப்படும்.

**பகுதிவாரியான செயல் திட்டங்களை வடிவமைப்பதில் எச்சரிக்கையும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் விழிப்பும் தேவை –** சமூக மாற்றங்களுக்காக ஆண்களுடன் பணிபுரிவது கொஞ்சம் ஆபத்தானதும் அதேசமயம் உற்சாகமானதாகவும் இருக்கும். ஆண்கள் பரம்பரை பரம்பரையாக அதிகாரம் செய்பவர்களாகவும், பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் மற்றும்

அதிக எண்ணிக்கையிலான சமூக சலுகைகளை அனுபவித்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த மாற்றங்களை ஆண்கள் அவ்வளவு எளிதில் சீரணித்துக்கொள்ளமாட்டார்கள். இருப்பினும் எல்லா காலங்களிலும், எல்லா நிலைகளிலும், எல்லா ஆண்களும் அவர்கள் விரும்பினாலும் உயர் அதிகாரத்தை கொண்டிருப்பதில்லை. இந்த ஆதிக்க அல்லது சிறந்த ஆண்மை மீதான ஈர்ப்புதான் கீழ்நிலையிலிருக்கும் ஆண்களைக்கூட, சமூக விதிமுறை என்ற பெயரில் பெண்கள் மீது அதிகார உறவை பிரதிபலிக்க செய்கிறது. பாலுறவு மற்றும் மகப்பேறு நல நல உரிமைகளுக்காக ஆண்களுடன் செய்யும் பணியானது, அவர்களது சொந்த நடவடிக்கைகளை, அதனால் அவர்கள் யாரை அன்பு செய்து பேணுகிறோம் என்கிறார்களோ அவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை, மறு ஆய்வுக்கு உட்படுத்துகிறது. அதிகாரம், சலுகைகள் இவற்றால் மற்றவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புக்களை ஆய்வுசெய்து, தங்களது மற்ற சமூக உறவுகளையும் சீர்தூக்கிப்பார்க்க, ஆண்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. பல மரபு சமூகங்களில், ஆண்மேலாதிக்கமும் ஆதிக்க ஆண்மையும் ஒன்றை ஒன்று நிலைநிறுத்தம் செய்துகொள்கின்றன. தொடர்ச்சியான பல வகை படிநிலைகொண்ட சமூக உறவுகளின் பிணைப்பின் மூலம் இது சாத்தியமாகிறது. அவை இனம், தேசியம், சமூக வர்க்கம், மதப்பெரும்பாண்மை, இன்னும் பல இடங்களில் இது போன்ற பல பிற, சமூக அதிகார கோடாறிகள் இருக்கின்றன. பாலியல் உறவுகளை ஆய்வு செய்வதும் மற்றும் சமத்துவத்தை ஓர் இயற்கையான சமூக விருப்பமாக பாராட்டுவதும், ஆண்களை மற்றத் தளங்களிலும் சமூக நீதிக்காக வேலை செய்யத் தூண்டும். இந்த கோணத்தில் பணிகள் நடந்தால் அது உண்மையிலேயே முழுமையான இயல்பான மாற்றம் மற்றும் ஒட்டுமொத்த, சமூக மாற்றத்திற்கான பேராற்றல் மிக்க முன்னணி சக்தியாக விளங்கும். இருப்பினும் அதே சமயம், அனைத்தையும் தனக்கென அபகரிக்கும் தன்மைக்கொண்ட ஆண்மை மற்றும் அழிக்கும் தன்மையுடைய ஆண்மேலாதிக்க அதிகாரத்தையும் குறித்த எச்சரிக்கையும் தேவை. ஆண்கள் தனிமனிதர்களாகவும், கூட்டாகவும் பெண்களின் நலனை ஆதரிக்கிறோம் என்ற பெயரில், தந்தைக்குரிய பாதுகாப்பு அணுகுமுறையை பயன்படுத்துவார்கள். அப்படியே மிகவும் நாசுக்காக

அவர்களது அதிகாரத்தை அதிகப்படுத்துவார்கள். பின் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, ஒட்டுமொத்தமாக இந்த முயற்சிகள் அனைத்தையும் அழித்துவிடுவார்கள்.

இந்த அற்புதமான, உணர்ச்சிகரமான பணியை இணைந்தும் மற்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்தும் உருவாக்கும், நடைமுறைபடுத்தும் ஆண்கள் பங்கேற்பு வலைபின்னலின் உறுப்பினர்களையும் தோழமை அமைப்பினரையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

---

1. World population policies: Their origin, Evloution and Impact; John F May 2012 Springer
2. Reproductive and sexual Rights: Charting the Course of Trasnational Women's NGOs; Rosalind Petchesky, UNRISD 2000

தமிழில் மொழிப்பெயர்த்தவர் லூசி சேவியர், ஏக்தா பெண்களுக்கான ஆதார மையத்திற்காக.